Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commenc e ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 04.03.2016 | 04.03.16 | A1 05.03.16<br>A2 18.03.16 | A1 14.03.16<br>A2 18.03.16 | 23.03.17 | 11.06.26 | 07.07.26 |
| C.S.D. 08.04.16 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.01.07.16 | | | | | | |
| D.Cogni.01.07.16 | | | | | | |
| A.P.D. 23.03.17 | | | | | | |

Judgment in CC 115/2016 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Tenkasi P.S in Cr.No.98/2016

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| 1)Isairaj | 25/16 | Esakkimuthu |
| 2)Selvi | 47/16 | Esakkimuthu |
| 3)Muthu @ Esakkimuthu (Died) | 40/16 | Velu |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Sinthamani | Tenkasi |

**Offence** : Section 294(b), 323, 326, 506(2) IPC

**Sentence** : A1 is found not guilty Sec.294(b), 326, 506(2) IPC, A2 is found not guilty Sec.294(b), 323, 506(2) IPC and the accused are acquitted Sec.248(1) of Crpc.,

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.07 07:45:16 +0530

Judicial Magistrate,
Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜூலை திங்கள் 7 ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 115/2016
CNR.No.TNTS02-000060-2026

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
தென்காசி கா.நி.கு.எண் 98/2016 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. இசைராஜ், 25/16,
த.பெ.இசக்கிமுத்து,
தெற்கு தெரு,
சிந்தாமணி

2. செல்வி, 47/16,
க.பெ.இசக்கிமுத்து,
தெற்கு தெரு,
சிந்தாமணி

3. முத்து என்ற இசக்கிமுத்து, 40/16, (இறப்பு)
த.பெ.வேலு,
தெற்கு தெரு,
சிந்தாமணி ... எதிரிகள்

இவ்வழக்கு கடந்த 01.07.2016 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கணேசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## <u>தீர்ப்புரை</u>

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> –

இவ்வழக்கின் சாட்சி.1ன் 04.03.2016ம் தேதி மாலை 06.30 மணியளவில் தனது வீட்டின் முன்பு பேசிக் கொண்டிருக்கும் போது ஏற்கனவே இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வரும் நிலையில் அதை மனதில் வைத்துக்

கொண்டு அங்கு வந்த 1,2,3 எதிரிகள், சாட்சி.1 ஐப் பார்த்து பொதுயிடத்தில் வைத்து ஏய் தேவிடியா மவனே என்று அசிங்கமாக பேசியும், 1 ம் எதிரி சுத்தியலால் சாட்சி.1 ன் இடது காதில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2,3 ம் எதிரிகள் கம்பால் சாட்சி.1 ன் முதுகில் அடித்து சாதாரணகாயத்தை ஏற்படுத்தியும், மேலும், 1,2,3 ம் எதிரிகள் சேர்ந்து சாட்சி.1 ஐ வெட்டிக் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, 1 ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2)ன் கீழும், 2,3 ம் எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது தென்காசி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3(i). ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி 1 ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2)ன் கீழும், 2,3 ம் எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

3(ii). அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்காக வழக்கானது நிலுவையில் இருந்த போது குற்றப்பத்திரிக்கையில் கண்ட 3 ம் எதிரியான முத்து என்ற இசக்கிமுத்து என்பவர் இறந்துவிட்டார் என்று அரசு தரப்பில் இறப்பு சான்று தாக்கல் செய்யப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. மேலும், 1 சான்றுப்பொருள் குறியீடு செய்யப்பட்டன.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

5(i). அ.சா.1 அழகு சண்முகம் என்ற குமார், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், இறந்து போன எதிரி முத்து என்ற இசக்கிமுத்துவை தெரியும் என்றும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் வீடு கட்டுவதில் வீட்டு மனை பிரச்சனை இருந்து வந்ததாகவும், கடந்த 04.03.2016 ம் தேதி மாலை 06.30 மணியளவில் தான் தன் அம்மா கல்யாணி சுந்தரியுடன் தாங்கள் வீடு கட்டுவது சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது ஆஜர் எதிரிகளும், இறந்துபோன எதிரிகளுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே சண்டை இருப்பதால் எதிரிகள் தன் அம்மாவை தேவிடியா மவளே என்று திட்டிக் கொண்டும், தன்னை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிக்கொண்டு, எதிரி இசைராஜ் சுத்தியலை கொண்டு தனது இடது காதுவில் அடித்ததில் தனது இடது காது கிழிந்து தொங்கிவிட்டதாகவும், தான் கீழே விழுந்தவுடன் எதிரி செல்வியும், இறந்துபோன எதிரி முத்துவும், முதுகில் கம்பு மற்றும் சுத்தியலை கொண்டு அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அதனால் முதுகில் வீக்கம் ஏற்பட்டு ஊமைக்காயம் ஏற்பட்டதாகவும், இறந்து போனவரும் கம்பால் தான் தன்னை தாக்கினார்கள் என்றும், எதிரிகள் இன்னும் தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லிக் கொண்டு வருகிறார்கள் என்றும், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு எதிரிகள் இதே இடத்து சம்பந்தமாக அதே காலி மனையில் வைத்து வலது கையில் அடித்து தனக்கு கொலை செய்ய முயன்றார்கள் என்றும், அதன்பின் ஆட்டோவில் தனது அம்மா கே.பி. மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்கள் என்றும், அங்கு வந்த போலிசாரிடம் தான் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த புகார் வாக்குமூலம் தன்னிடம் காட்டப்படுவதுதான் என்றும், அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(ii). அ.சா.2 கல்யாண சுந்தரி, தனது சாட்சியத்தில், சாட்சி அழகுசண்முகம் என்ற குமார் தன் மகன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், இறந்து போன எதிரி முத்து என்ற இசக்கிமுத்துவை தெரியும் என்றும், எதிரிகளுக்கும், தங்களுக்கும் வீடு கட்டுவதில் வீட்டு மனை பிரச்சனை இருந்து வந்ததாகவும், எதிரிகள் வீடும் தங்கள் வீடும் எதிர் வீடு, எதிரிகள் தங்கள் உறவினர்கள் தான் என்றும், கடந்த 04.03.2016 ம்

தேதி மாலை 06.30 மணியளவில் தானும், தங்கள் ஊரைச் சேர்ந்த அழகம்மாள் என்பவரும், தன் மகனும் ஆகியோர் சேர்ந்து தங்கள் இடத்தை பற்றி பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது தன் மகன் எதிரி இசைராஜியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது இசைராஜ் சுத்தியலோடு வந்து சுத்தியால் தன் மகன் முதுகில் அடித்து காயப்படுத்தினார் என்றும், அதன்பின் எதிரி செல்வியும் இறந்துபோன முத்து வந்தவுடன் கம்பு, மட்டை மற்றும் சுத்தியால் தன் மகனை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அப்போது எதிரிகள் தன்னையும், தன் மகனையும் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அப்போது தன் மகன் கீழே விழுந்துவிட்டான் என்றும், தான் சத்தம்போட்டு அழுததாகவும், அதன்பின் நிறைய ஆட்கள் வந்தவுடன் எதிரிகள் போய்விட்டார்கள் என்றும், அதன்பின் தன் மகளை தான் கே.பி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அங்கு வந்த போலிசாரிடம் தன் மகன் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், தன் மகன் சிகிச்சையில் 15 நாட்கள் இருந்தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(iii). அ.சா.3 கந்தையா, தனது சாட்சியத்தில், சாட்சி அழகுசண்முகம் என்ற குமார் தன் மகன் என்றும், சாட்சி கல்யாணசுந்தரி தன் மனைவி என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், இறந்துபோன எதிரி முத்து என்ற இசக்கிமுத்துவை தெரியும் என்றும், எதிரிகள் தங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் என்றும், எதிரிகள் தன் மகனை அடித்து காயப்படுத்தியதாக கேள்விப்பட்டு கே.பி மருத்துவமனையில் சென்று பார்த்ததாகவும், அங்கு போலிசாரிடம் புகார் வாக்குமூலம் தன் மகன் கொடுத்தார் என்றும், அந்த புகார் வாக்குமூலம் தன்னிடம் காட்டப்படுவதுதான் என்றும், அந்த புகார் வாக்குமூலத்தில் தானும் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்ததாகவும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(iv). அ.சா.7 திரு.தர்மராஜ், உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், 04.03.2016ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 19.30 மணிக்கு நிலைய உத்தரவுபடி தென்காசி கே.பி மருத்துவமனைக்கு சென்று அங்கு காயம் சிகிச்சையில் இருந்த அழகுசுந்தரம் என்ற குமார் என்பவரிடம் நடந்த சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் பெற்று நிலையத்திற்கு 21.00 மணிக்கு வந்து தென்காசி காவல்

நிலையக் குற்ற எண்.98/2016, இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2)ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(v). அ.சா.8 திருமதி.தமிழ்செல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், கடந்த 04.03.2016ம் தேதி 18.30 மணிக்கு தர்மராஜ் சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அழகுசண்முகம் என்பவரிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.98/2016, இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளதாகவும், பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட விசாரணை அதிகாரி 04.03.2016ம் தேதி 22.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் அழகர் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சம்பவ இடத்திலிருந்து வழக்கின் சொத்தை அத்தாட்சி அ.சா.ஆ.7 பிறப்பித்து கைப்பற்றியுள்ளதாகவும், பின்னர் சாட்சிகள் அழகு சண்முகம் என்ற குமார், கல்யாண சுந்தரி, அழகம்மாள், கந்தையா, பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் தர்மராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 1வது எதிரியை 05.03.2016ம் தேதி 09.00 மணிக்கு தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்து தக்கவழிக் காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், மற்ற எதிரிகள் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்று விட்டதால் கைது செய்யவில்லை என்றும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர் சங்கரகுமார் என்பவரை

விசாரித்து காயச்சான்று அ.சா.ஆ.8 பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் வழக்கின் சொத்தை படிவம்91 அ.சா.ஆ.9 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பி.ஆர் எண்.76/2016 ஆக பெற்றுள்ளதாகவும், வழக்கின் சொத்துக்களான சுத்தியல் ஒன்று மற்றும் கம்புகள் இரண்டு அ.சா.பொ.1 என்றும், பின்பு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை 08.04.2016ல் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரிகள் பொய்ச்சாட்சி என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

**8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்** –

எதிரிகள், அ.சா.1யை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.8 வரையுள்ள சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

9. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –

அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிகளுக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. தீர்வு –

இவ்வழக்கின் சாட்சி.1 ன் 04.03.2016 ம் தேதி மாலை 06.30 மணியளவில் தனது வீட்டின் முன்பு பேசிக் கொண்டிருக்கும் போது ஏற்கனவே இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வரும் நிலையில் அதை மனதில் வைத்துக் கொண்டு அங்கு வந்த 1,2,3 எதிரிகள், சாட்சி.1 ஐப் பார்த்து பொதுயிடத்தில் வைத்து ஏய் தேவிடியா மவனே என்று அசிங்கமாக பேசியும், 1 ம் எதிரி சுத்தியலால் சாட்சி.1 ன் இடது காதில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2,3 ம் எதிரிகள் கம்பால் சாட்சி.1 ன் முதுகில் அடித்து சாதாரணகாயத்தை ஏற்படுத்தியும், மேலும், 1,2,3 ம் எதிரிகள் சேர்ந்து சாட்சி.1 ஐ வெட்டிக் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரிகளின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, புகார்தாரரான அ.சா.1 அழகு சண்முகம் என்ற குமார், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், இறந்து போன எதிரி முத்து என்ற இசக்கிமுத்துவை தெரியும் என்றும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் வீடு கட்டுவதில் வீட்டு மனை பிரச்சனை இருந்து வந்ததாகவும், கடந்த 04.03.2016 ம் தேதி மாலை 06.30 மணியளவில் தான் தன் அம்மா கல்யாணி சுந்தரியுடன் தாங்கள் வீடு கட்டுவது சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது ஆஜர் எதிரிகளும், இறந்துபோன எதிரிகளுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே சண்டை இருப்பதால் எதிரிகள் தன் அம்மாவை தேவிடியா மவளே என்று திட்டிக் கொண்டும், தன்னை பார்த்து

உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிக்கொண்டு, எதிரி இசைராஜ் சுத்தியலை கொண்டு தனது இடது காதுவில் அடித்ததில் தனது இடது காது கிழிந்து தொங்கிவிட்டதாகவும், தான் கீழே விழுந்தவுடன் எதிரி செல்வியும், இறந்துபோன எதிரி முத்துவும், முதுகில் கம்பு மற்றும் சுத்தியலை கொண்டு அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அதனால் முதுகில் வீக்கம் ஏற்பட்டு ஊமைக்காயம் ஏற்பட்டதாகவும், இறந்து போனவரும் கம்பால் தான் தன்னை தாக்கினார்கள் என்றும், எதிரிகள் இன்னும் தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லிக் கொண்டு வருகிறார்கள் என்றும், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு எதிரிகள் இதே இடத்து சம்பந்தமாக அதே காலி மனையில் வைத்து வலது கையில் அடித்து தனக்கு கொலை செய்ய முயன்றார்கள் என்றும், அதன்பின் ஆட்டோவில் தனது அம்மா கே.பி. மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்கள் என்றும், அங்கு வந்த போலிசாரிடம் தான் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த புகார் வாக்குமூலம் தன்னிடம் காட்டப்படுவதுதான் என்றும், அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், போலிசார் சொல்லி தான் இந்த வழக்கில் முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், தனக்கு ஏற்பட்ட காயங்கள் தான் பைக்கில் தவறி விழுந்து ஏற்பட்ட காயம் என்றால் சரிதான் என்றும், எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசவில்லை என்றாலும், அடித்துக் காயப்படுத்தவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரிதான் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான் என்றும், தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 கல்யாண சுந்தரி, தனது சாட்சியத்தில், சாட்சி அழகுசண்முகம் என்ற குமார் தன் மகன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், இறந்து போன எதிரி முத்து என்ற இசக்கிமுத்துவை தெரியும் என்றும், எதிரிகளுக்கும், தங்களுக்கும் வீடு கட்டுவதில் வீட்டு மனை பிரச்சனை இருந்து வந்ததாகவும், எதிரிகள் வீடும் தங்கள் வீடும் எதிர் வீடு, எதிரிகள் தங்கள் உறவினர்கள் தான் என்றும், கடந்த 04.03.2016 ம்

தேதி மாலை 06.30 மணியளவில் தானும், தங்கள் ஊரைச் சேர்ந்த அழகம்மாள் என்பவரும், தன் மகனும் ஆகியோர் சேர்ந்து தங்கள் இடத்தை பற்றி பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது தன் மகன் எதிரி இசைராஜியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது இசைராஜ் சுத்தியலோடு வந்து சுத்தியால் தன் மகன் முதுகில் அடித்து காயப்படுத்தினார் என்றும், அதன்பின் எதிரி செல்வியும் இறந்துபோன முத்து வந்தவுடன் கம்பு, மட்டை மற்றும் சுத்தியால் தன் மகனை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அப்போது எதிரிகள் தன்னையும், தன் மகனையும் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அப்போது தன் மகன் கீழே விழுந்துவிட்டான் என்றும், தான் சத்தம்போட்டு அழுததாகவும், அதன்பின் நிறைய ஆட்கள் வந்தவுடன் எதிரிகள் போய்விட்டார்கள் என்றும், அதன்பின் தன் மகளை தான் கே.பி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அங்கு வந்த போலிசாரிடம் தன் மகன் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், தன் மகன் சிகிச்சையில் 15 நாட்கள் இருந்தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், போலிசார் சொல்லி தான் இந்த வழக்கில் முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் சட்சியம் அளித்தேன் என்றால் சரிதான் என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான் என்றும், அ.சா.1 தன் மகனுக்கு ஏற்பட்ட காயம் அவர் பைக்கிலிருந்து தவறி கீழே விழுந்து ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும், சொன்ன நாள், நேரத்தில் அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 கந்தையா, தனது சாட்சியத்தில், சாட்சி அழகுசண்முகம் என்ற குமார் தன் மகன் என்றும், சாட்சி கல்யாணசுந்தரி தன் மனைவி என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், இறந்துபோன எதிரி முத்து என்ற இசக்கிமுத்துவை தெரியும் என்றும், எதிரிகள் தங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் என்றும், எதிரிகள் தன் மகனை அடித்து காயப்படுத்தியதாக கேள்விப்பட்டு கே.பி மருத்துவமனையில் சென்று பார்த்ததாகவும், அங்கு போலிசாரிடம் புகார் வாக்குமூலம் தன் மகன் கொடுத்தார் என்றும், அந்த புகார் வாக்குமூலம் தன்னிடம்

காட்டப்படுவதுதான் என்றும், அந்த புகார் வாக்குமூலத்தில் தானும் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்ததாகவும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், போலிசார் சொல்லி தான் இந்த வழக்கில் முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் சட்சியம் அளித்தேன் என்றால் சரிதான் என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான் என்றும், அ.சா.1 தன் மகனுக்கு ஏற்பட்ட காயம் அவர் பைக்கிலிருந்து தவறி கீழே விழுந்து ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும், சொன்ன நாள், நேரத்தில் அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்றும், தான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்ததில் தான் என்ன எழுதி இருந்தேன் என்று தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை முற்றிலும் மறுத்து தங்களது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தில் இயற்கையாகவும், கோர்வையாகவும், நம்பகத்தன்மை இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. அ.சா.4 அழகம்மாள், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், இறந்துபோன எதிரி முத்து என்ற இசக்கிமுத்துவை தெரியும் என்றும், தனக்கு சாட்சி அழகுசண்முகசுந்தரம் என்ற குமாரை தெரியும் என்றும், கல்யாணசுந்தரியை தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் கொத்தனார் வேலைக்கு சென்றுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.5 அழகர், தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 தன்னுடையது தான் என்றும், அந்த கையெழுத்து போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க செய்து கொடுத்ததாகவும், அதில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.6 வெங்கடேஷ், தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 தன்னுடையது தான் என்றும், அதை தான் காவல் நிலையத்தில் வைத்து காவலர்கள் வேண்டுக் கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், அதில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது, எதிரிகள், புகார்தாரரை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு வெகுவாக பாதிக்கிறது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

18. இந்த வழக்கில், அ.சா.7 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், அ.சா.8 தனது சாட்சியத்தில், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.7, அ.சா.8 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகள் குற்ற செயல்களில் ஈடுபட்டார் என்றோ அல்லது எதிரிகளுக்கு எதிரான அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

20. முடிவில், 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றவாளி இல்லை

என்று முடிவு செய்து எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21. இவ்வழக்கின் 1ம் எதிரி கடந்த 05.03.2016ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, கடந்த 14.03.2016ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். 2ம் எதிரி திருநெல்வேலி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று கடந்த 18.03.2016ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

**<u>22. வழக்குச் சொத்து</u> –**

இந்த வழக்கில் பி.ஆர்.எண்.76/2016ல் தாக்கலான வழக்கு சொத்தான வரிசை எண்.1)சுத்தியல் ஒன்று அதில் சுமார் 10 CM இரும்பு பாகமும், சுமார் 33 CM கம்பு பாகமும் உடையது, மேற்படி பி.ஆர்.எண்.76/2016ல் தாக்கலான வழக்கு சொத்தான வரிசை எண்.2)சுமார் 96 CM நீளமுள்ள சிறிய சவுக்கு கம்புகள் இரண்டு ஆகியவை மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூலை திங்கள் 7ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.07 07:45:32 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | அழகுசண்முகம் என்ற குமார் |
| அ.சா.2 | கல்யாண சுந்தரி |
| அ.சா.3 | கந்தையா |
| அ.சா.4 | அழகம்மாள் |
| அ.சா.5 | அழகர் |
| அ.சா.6 | வெங்கடேஷ் |
| அ.சா.7 | திரு.தர்மராஜ், உதவி ஆய்வாளர் |
| அ.சா.8 | திருமதி.தமிழ்செல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலம் | 02.03.2021 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.5 ன் முதலாவது கையொப்பம் | 25.10.2021 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.6 ன் இரண்டாவது கையொப்பம் | 22.11.2021 | அ.சா.ஆ.3 | அ.சா.6 | அசல் |
| 4 | முதல் தகவல் அறிக்கை | 27.06.2024 | அ.சா.ஆ.4 | அ.சா.7 | அசல் |
| 5 | பார்வை மகஜர் | 11.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.8 | அசல் |
| 6 | மாதிரி வரைபடம் | 11.06.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.8 | அசல் |
| 7 | அத்தாட்சி | 11.06.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.8 | அசல் |
| 8 | காயச்சான்று | 11.06.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.8 | அசல் |
| 9 | படிவம்91 | 11.06.2026 | அ.சா.ஆ.9 | அ.சா.8 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –**

| வ.எண். | தேதி | சான்றுப் பொருள் |
|---|---|---|
| 1 | 11.06.2026 | வழக்கின் சொத்துக்களான சுத்தியல் ஒன்று மற்றும் கம்புகள் இரண்டு |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.07 07:45:37 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**குறிப்பு :–**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.